# கணக்கீடு
# ACCOUNTING

# G.C.E - A/L

## சீராக்கங்கள்

ஆசிரியர்
K. T. சீலன்
T.P. 077-3175720

- வெளியீடு -

| | |
|---|---|
| C.B.A கல்வி நிலையம் | சுடர் கல்வி நிலையம் |
| கதிரேசு வீதி, வவுனியா | குட்செட் ரோட், வவுனியா |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா - 01 -

வசந்தி நிறுவனத்தின் 31.12.2003 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள்

1. மாதாந்த வாடகை 400/= வாடகைக் கணக்கு 4000/= ஐ காட்டியது.
2. 1.4.03 இல் தொடங்கும் வருடாந்த காப்புறுதியாக 12000/= செலுத்தப்பட்டுள்ளது. இது காப்புறுதியாகப் பதியப்பட்டது.
3. 1.11.03 இல் 6000/= க்கு மின்சாரம் ஒன்று வருடத்திற்காக கொடுக்கப்பட்டது. இது மின்சார முற்பணமாகப் பதியப்பட்டது.
4. 1.7.03 இல் தொடங்கும் இரண்டு வருடங்களுக்காக 24000/= வாடகை வருமானமாகப் பெறப்பட்டுள்ளது. இது வாடகை வருமானக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.
5. 1.10.03 இல் தொடங்கும் 3 வருடங்களுக்காக 60000 விளம்பர ஒப்பந்தம் செலுத்தப்பட்டது. இது விளம்பரச் செலவாகப் பதியப்பட்டது.
6. ஆண்டுக்காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட காகிதாதிகள் 1900 காகிதாதிக் கணக்கில் பதியப்பட்டது. பயன்படுத்தப்படாத காகிதாதி 400
7. 1.12.03 இல் தொடங்கும் 10 மாதங்களுக்காக தொலைபேசிக் கட்டணம் 5000/= செலுத்தப்பட்டது. தொலைபேசிக் கணக்கில் செலவாகப் பதியப்பட்டது.
8. எதிர்வரும் ஆண்டுக்காக 50000/= விற்பனை ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. கடன் விற்பனையாகக் கருதி பதிவுகள் இடம் பெற்றன.

வேண்டப்படுவது:-

நாட்குறிப்புப் பதிவுகள்

வினா - 02 -

மோகன் நிறுவனத்தின் 2004 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தகவல்கள்.

1. 01.01.04 இல் தொடங்கும் வருடாந்த காகிதாதிக் கட்டணமாக 500/= செலுத்தப்பட்டது இது காகிதாதி கணக்கில் பதியப்பட்டுள்ளது.
2. 01.02.04 இல் தொடங்கும் இரண்டு வருடங்களுக்கான விளம்பர ஒப்பந்தம் ஒன்றிற்காக 24000/= செலுத்தப்பட்டது. இது விளம்பர முற்பணமாக பதியப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. 01.10.03 இல் தொடங்கும் இரண்டு வருட வாடகை வருமானமாக ரூபா 25000 பெறப்பட்டுள்ளது. இது வாடகை வருமானக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.
4. அடுத்து வரும் ஆண்டிற்காக ரூபா 200000 விற்பனை ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. இதற்கு ரூபா 20000 முற்பணம் பெறப்பட்டுள்ளது. இது தொடர்பான விற்பனை கடன் விற்பனையாகக் கருதப்பட்டதுடன் முற்பணம் கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட காசாகக் கருதப்பட்டிருந்தது.
5. 01.06.03 இல் தொடங்கும் ஆண்டுக்காலத்திற்குரிய தொலைபேசிக் கட்டணம் ரூபா 12000 செலுத்தப்பட்டது. இது தொலைபேசிக் கணக்கில்
6. 01.03.04 இல் தொடங்கும் 18 மாதங்களுக்காக ரூபா 9000 வாடகை ஒன்று செலுத்தப்பட்டது.

## வினா - 03 -

நளினி நிறுவனம் ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 இல் முடிவுக் கணக்குகளைத் தயாரிப்பது வழக்கம். இந்நிறுவனத்தின் முடிவடைந்த 2004 ஆம் ஆண்டிற்கான தகவல்

1. ஆண்டுக் காலத்தில் காகிதாதிகள் கணக்கானது 7500/= மீதியைக் காட்டியது. ஆனால் கணிப்பீட்டின் போது இறுதியிருப்பு 620/= கவனத்தில் கொள்ளப்படவில்லை
2. 01.01.2004 இல் தொடங்கும் 2 வருடங்களுக்காக கட்டடவாடகையாக 30000/= பெறப்பட்டது. இது வாடகை வருமான முற்பணமாகப் பதியப்பட்டிருந்தது.
3. 01.03.2004 இல் தொடங்கும் 2 வருடங்களுக்காக செலுத்தப்பட்ட விளம்பரம் 12000/= என விளம்பரக் கணக்கு காட்டியது.
4. பொதிகட்டும் பொருளில் 01.04.2003 இல் காணப்பட்ட மீதி 470/= பதிவுசெய்யப்பட்டிருக்கவில்லை.
5. மோட்டர் வாகனம் திருத்துவதற்காக செலவு செய்யப்பட்ட 12000/= மோட்டர் கணக்கில் பதியப்பட்டிருந்தது.
6. நிறுவனம் ஆண்டுக்காலத்திற்குரிய வருமான வரியாக 4300/= செலுத்தியது வருமானவரிக் கணக்கில் காட்டுகின்றது.
7. 31.12.2003 இல் தொடங்கும் 10 மாதங்களுக்கான 20000/= வாடகை செலுத்தப்பட்டுள்ளது என வாடகைக் கணக்கு காட்டுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. 01.10.2003 இல் தொடங்கும் 1 1/2 வருடத்திற்கு செலுத்தப்பட்ட மின்சாரம் 21000/= இது மின்சாரக்கணக்கில் பதியப்பட்டுள்ளது.

09. மாதாந்த சம்பளம் 12500/= சம்பளக்கணக்கு 125000/= ஐ காட்டியது.

10. மாதாந்த இறை 60/= இது 01.04.2003 இல் செலுத்தப்பட்டது. இறை கணக்கு 800/= வைக் காட்டியது.

## வினா - 04- அட்டுறு செலவுகள்

31.12.2001 இல் பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| வாடகை | 1100 | |
| மின்சாரம் | 5000 | |
| சம்பளம் | 20000 | |

**மேலதிக விபரம்**

பின்வரும் செலவுகள் 31.12.01 இல் சென்மதியாக இருந்தது

வாடகை 1500 மின்சாரம் 2200

சம்பளம் 5000

**வேண்டப்படுவது:-**

01. தேவையான பேரேடுகள்
02. சீராக்கங்களுக்கு நாட்குறிப்பு

## வினா - 05- அட்டுறு வருமானம் அல்லது மேலதிக வருமானம்

31.12.2003 இல் பரீட்சைமீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| வாடகை வருமானம் | | 6000 |
| தரகு வருமானம் | | 5000 |
| முதலீட்டு வருமானம் | | 9000 |

மேலதிக விபரம்:-

6000 வாடகை வருமானத்தில் 550/= இன்னும் பெறவேண்டி உள்ளது

தரகுவருமானத்தில் 400/= இன்னும் பெறவேண்டியுள்ளது.

பெற்ற வட்டி வருமானத்தில் 2000/= இன்னும் பெறவேண்டியுள்ளது.

வேண்டப்படுவது:- 01. தேவையான பேரேடுகள்
02. சீராக்கங்களுக்கு நாட்குறிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினா - 05-

31.03.2004 இல் பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| 1.4.03 முற்பணச்செலவு | | |
| வாடகை | 1140 | |
| மின்சாரம் | 800 | |
| 1.4.03 சென்மதி | | |
| சம்பளம் | | 2100 |
| காப்புறுதி | | 1000 |
| 1.4.03 வருமதிகள் | | |
| தரகு வருமானம | 200 | |
| முதலீட்டுவருமானம் | 700 | |
| வாடகை | 6000 | |
| சம்பளம் | 11000 | |
| காப்புறுதி | 10000 | |
| தரகு வருமானம் | | 5000 |
| முதலீட்டுவருமானம் | | 2600 |

**மேலதிக விபரம்:-**

01. 31.3.04 இல் சென்மதிகள்

| | |
|---|---|
| காப்புறுதி | 700 |
| சம்பளம் | 3000 |
| மின்சாரம் | 1000 |

02. வருமதிகள்

| | |
|---|---|
| தரகு வருமானம் | 100 |
| முதலீட்டுவருமானம் | 150 |

வேண்டப்படுவது:-

01. தேவையான பேரேடுகள்
02. சீராக்கங்களுக்கு நாட்குறிப்பு
03. ஐந்தொகைச் சுருக்கம், இலாப நட்டக்கணக்கு சுருக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினா - 06 -

31.12.03 இல் X நிறுவன பரீட்சை மீதியில் பிரித்தெடுக்கப்பட்டவை

31.12.03 இல் பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| **01.01.2003 இல்** | | |
| **சென்மதிகள்** | | |
| வாடகை | | 1100 |
| சம்பளம் | | 2500 |
| **முற்பணங்கள்** | | |
| காப்புறுதி | 500 | |
| விளம்பரம் | 400 | |
| **வருமதிகள்** | | |
| வாடகைவருமா | 750 | |
| தரகு வருமா | 200 | |
| **முற்பண வருமான** | | |
| முதலீட்டு வருமா | | 420 |
| வாடகை | 8000 | |
| சம்பளம் | 18000 | |
| காப்புறுதி | 2800 | |
| விளம்பரம் | 5500 | |
| வாடகை வருமான | | 4100 |
| தரகு வருமானம் | | 5050 |
| முதலீட்டு வருமான | | 1000 |

மேலதிக விபரங்கள்

31.12.2003 இல் சென்மதி
- வாடகை 1900
- காப்புறுதி 950

31.12.2003 இல் முற்பணம்
- சம்பளம் 500
- விளம்பரம் 100

31.12.2003இல் வருமதிகள்
- தரகுவருமானம் 250
- முதலீட்டுவருமானம் 500

31.12.2003இல்பெற்றமுற்பணம்
- வாடகை வருமானம் 200

**வேண்டப்படுவது:-**

01 தேவையானபேரேட்டுக்கணக்குகள்

02. இலாபநட்டக/கு சுருக்கம், ஐந்தொகைச் சுருக்கம்

03. சீராக்கல்களுக்கு நாட்குறிப்பு

## வினா - 07 - 31.12.200 இல் பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| வாடகை | 4500 | |
| மின்சாரம் | 3000 | |
| காப்புறுதி | 4000 | |
| பெ.வாடகை | | 2400 |
| தரகு வருமானம் | | 3000 |
| சம்பளம் | 60000 | |
| மொ.இலாபம் | | 100 000 |

1. வாடகையானது 01.01.03 தொடங்கும் 15 மாதங்களுக்காக செலுத்தப்பட்டுள்ளது
2. 01.04.03 இல் தொடங்கும் வருடாந்த கட்டணமாக மின்சாரத்திற்கு செலுத்தப்பட்ட தொகையை எடுத்துக் காட்டுக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. மாதாந்த காப்புறுதி கட்டணம் 400/=
4. 01.07.03 இல் தொடங்கும் வருடாந்த வாடகை வருமானம் பெறப்பட்டுள்ளது.
5. 01.01.03 இல் தொடங்கும் வருடத்திற்காக மாதாந்தம் 200/= பெ பெறப்பட்டுள்ளது
6. மாதாந்த சம்பளம் 4000/= ஆகும்.

**வேண்டப்படுவது:-**

(1) மேற்கூறிய பதிவுகளுக்கான சீராக்கப் பதிவுகள்

(2) தேவையான பேரேட்டின் கணக்கு ஊடாக இலாபநட்டக்கணக்கு

## வினா - 08 -

சந்ரு நிறுவனத்தின் 31.12.03 முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள்

01. 01.04.03 தொடங்கும் வருடாந்த வாடகையாக 6000/= செலுத்தப்பட்டுள்ளது. இது வாடகையாகப் பதியப்பட்டுள்ளது.
02. 1.7.03 தொடங்கும் வருடாந்த காப்புறுதியாக 10000/= செலுத்தப்பட்டது. இது காப்புறுதி முற்பணக்கணக்கில் பதியப்பட்டிருந்தது.
03. மாதாந்த சம்பளம் 5000/= சம்பளக் கணக்கில் 55000/= வை காட்டியது.
04. தரகு வருமானம் 01.07.03 இல் தொடங்கும் 10 மாதங்களுக்கு 10000/= பெறப்பட்டது.
05. 01.10.03 இல் தொடங்கும் 2 வருடங்களுக்காக பெறப்பட்ட வாடகை 12000/= வாடகைக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:-**

சீராக்கங்களுக்கான நாட்குறிப்பு பதிவு

## வினா - 09 - 31.12.2004 இல் முடிவடையும் நந்தா நிறுவனத்தின் நடவடிக்கை சில

01. 1.7.03 இல் தொடங்கும் 10 மாதங்களுக்கு வாடகை 12000/= பெறப்பட்டது. வாடகைக் கணக்கில் பதியப்பட்டது.
02. 1.3.04 இல் தொடங்கும் 2 வருட விளம்பர ஒப்பந்தம் ஒன்றுக்காக 30000/= செலுத்தப்பட்டது. விளம்பர முற்பணக்கணக்கில் பதியப்பட்டது.
03. 1.1.04 இல் தொடங்கும் 2 வருட வாடகை வருமானமாக 9000/= பெறப்பட்டது. இது வாடகை வருமானக்கணக்கில் பதியப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. 1.2.04 இல் 1 1/2 வருடங்களுக்கான மின்சாரக் கொடுப்பனவாக 6000/= செலுத்தப்பட்டது மின்சாரக்கணக்கில் பதியப்பட்டது.

05. ஆண்டுக்காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட பொதிகட்டல் பொருள் 4500/= இதில் 500/= பயன்படுத்தப்படவில்லை

06. இறுதிஇருப்பு சந்தை விலை 52000/= கொள்விலை 55000/=

07. 1.5.03 இல் தொடங்கும் 2 வருட காப்புறுதி ஒப்பந்தமாக 12000/= செலுத்தப்பட்டது இது காப்புறுதி கணக்கில் பதியப்பட்டது.

**வேண்டப்படுவது:-**

சீராக்கங்களுக்கு நாட்குறிப்பு பதிவு

## வினா - 10 - x நிறுவன பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| காணிகட்டடம் | 200000 | 40000 |
| மோட்டார்வான | 250000 | 100000 |
| கணணி பொறி | 150000 | 60000 |
| தளபாடம் | 100000 | 50000 |

பின்வருமாறு தேயவிடுக

| | | |
|---|---|---|
| காணி கட்டடம் - | 2% | நேர்கோட்டுமுறை |
| தளபாடம் - | 10% | |
| மோட்டார்வான் - | 20% | ஒடுங்குபாகமுறை |
| கணணி - | 15% | |

**வேண்டப்படுவது:-**

இலாபநட்டக்கனக்கு கருக்கம், ஐந்தொகைச் கருக்கம்

## வினா - 11 - 31.03.04 இல் பரீட்சை மீதி

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| காணிகட்டடம்(கிரயம்) | 300000 | 250000 |
| மோட்டார்வாகனம் | 200000 | 140000 |
| பொறி | 160000 | 100000 |
| தளபாடம் | 120000 | 100000 |

பெறுமானத்தேய்வு வீதம் :-

| | |
|---|---|
| காணிகட்டடம்(கிரயம்) | 50% |
| மோட்டார்வாகனம் | ஏட்டுப்பெறுமதி 20% |
| பொறி | ஏட்டுப்பெறுமதி 10% |
| தளபாடம் (கிரயம்) | 10% |

**வேண்டப்படுவது:-**

இலாபநட்டக்கனக்குச் சுருக்கம், ஐந்தொகைச் சுருக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினா - 13 -

மோகன் நிறுவனத்தின் 31.3.04 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தகவல்கள்

1. 1.1.04 இல் தொடங்கும் வருடாந்த காப்புறுதிக் கட்டணமாக 5000/= செலுத்தப்பட்டுள்ளது.
2. 1.2.04 இல் தொடங்கும் இரண்டு வருடங்களுக்காக விளம்பர ஒப்பந்தத்திற்காக 24000/= செலுத்தப்பட்டுள்ளது. இது விளம்பர முற்பணமாகப் பதியப்பட்டது.
3. 1.10.03இல் தொடங்கும் 2வருடவாடகை வருமானமாக 25000/= பெறப்பட்டுள்ளது. இதற்காக 20000/= முற்பணம் பெறப்பட்டுள்ளது.
4. இது தொடர்பாக விற்பனை கடன் விற்பனையாகக் கருதப்படுவதுடன் முற்பணம் கடன் பட்டோரிடம் பெறப்பட்ட காசாக கருதப்பட்டிருந்தது.
5. 1.6.03 இல் தொடங்கும் ஆண்டுக்காலத்திற்குரிய தொலைபேசிக் கட்டணமாக 12000/= செலுத்தப்பட்டுள்ளது.
6. 1.3.04 இல் தொடங்கும் 18 மாதங்களுக்காக 9000/= வாடகை ஒன்றும் செலுத்தப்பட்டுள்ளது. அது வாடகை, முற்பணமாகப் பதியப்பட்டிருந்தது

**வேண்டப்படுவது:-**

நாட்குறிப்பு பதிவுகள்

## வினா - 14

நளினி நிறுவனம் ஒவ்வொரு வருடமும் மார்ச் 31 இல் முடிவுக் கணக்குகளை தயாரிப்பது வழக்கம். இந் நிறுவனத்தின் முடிவடைந்த 2004 ஆம் ஆண்டுக்கான தகவல்கள்

1. ஆண்டுக்காலத்தில் காகிதாதிகள் கணக்கானது 7500/= மீதியைக்காட்டியது. ஆனால் கணிப்பீட்டின் போது இறுதியிருப்பு 620/= கவனத்தில் கொள்ளப்படவில்லை.
2. 1.1.04 தொடக்கம் 2 வருடங்களுக்காக கட்டட வாடகையாக 30000/= பெறப்பட்டது. இது வாடகை வருமான முற்பணமாகப் பதியப்பட்டிருந்தது.
3. 01.03.04 இடல் தொடங்கும் 2 வருடங்களுக்காக செலுத்தப்பட்ட விளம்பரம் 12000/= என விளம்பரக் கணக்கு காட்டியது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மொதி கட்டும் பொருளாக 1.04.03 இல் காணப்பட்ட மீதி 470/= பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

5. மோட்டார் வாகனம் திருத்துவதற்காக செலவு செய்யப்பட்ட 12000/= மோட்டார் கணக்கில் பதியப்பட்டிருந்தது.

6. நிறுவனம் ஆண்டுக்காலத்திற்குரிய வருமான வரியாக 4300 செலுத்தியது என வருமான வரி கணக்கில் காட்டுகின்றது.

7. 31.10.03 இல் தொடங்கும் 10 மாதங்களுக்கான 20000/= வாடகை செலுத்தப்பட்டுள்ளது என வாடகைக் கணக்கு காட்டுகிறது.

8. 1.10.03 இல் தொடங்கும் 1 1/2 வருடத்திற்கு செலுத்தப்பட்ட மின்சாரம் 21000/= ஆகும் இது மின்சாரக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.

9. மாதாந்த சம்பளம் 12500/= சம்பளக் கணக்கு 125000/= ஐ காட்டியது

10. மாதாந்த இறை 60/= இது 1.04.03 இல் செலுத்தப்பட்டது. இறை கணக்கு 800/= ஐ காட்டியது.

## வினா - 15 -

கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் கணக்கீட்டு வாதங்களை (Accounting Issues) குறிப்பிடுகின்றன.

1. முக்கியத்துவ அடிப்படையில் ஒரு சிறிய தொகையுடன் சம்பந்தம் கொண்ட ஒரு கொடுக்கல் வாங்கலை பதிவிடத்தேவையில்லை.

2. பணத்தின் அலகுப் பெறுமதியானது காலப்பகுதிகளுக்கு நிலையானதாகக் காணப்படுவதில்லை

3. கணக்கீட்டு நியமங்கள் நிதிக் கூற்றுக்களுக்கு மேலதிக குறிப்புகளை வேண்டி நிற்கின்றன.

4. அலகுசார் எண்ணக்கருவின் படி அட்டுறுகளும் முற் கொடுப்பனவுகளும் அவசியமானவை

5. கூடுமானவரை வருமானத்தை விரைவாக அடையாளப்படுத்தல் செலவுகளை கூடுமானவரை தாமதமாக அடையாளப்படுத்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. இருப்புகளைப் பெறுமதியிடுகையில் கிரயத்தில் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதியில் குறைந்த பெறுமதியைப் பயன்படுத்த வேண்டும் என கணக்கீட்டு நியமம் வேண்டி நிற்கின்றது.
7. காசு பெற்றுக்கொள்ளப்படும் போது மட்டுமே வருமானத்தை அடையாளப்படுத்த முடியும்.
8. வரலாற்றுக் கிரயமானது ஐந்தொகையுடன் மட்டுமே தொடர்புடையதாகும்.

**வேண்டப்படுவது:-**

1. ஒவ்வொரு கூற்றும் சரியானதா அல்லது பிழையானதா என்பதைக் குறிப்பிடுக.
2. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நேரடியாகத் தொடர்புடைய எண்ணக்கருவை அல்லது தத்துவங்களைக்குறிப்பிடுக

## வினா - 16 -

பொதுவாகப் பயன்படுத்தப்படும் சில கணக்கீட்டுப் பதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| தேறிய இலாபம் | கணக்காண்டுக் காலம் |
| தேறிய எண்ணக்கரு | பெறுமானத்தேய்வு |
| அட்டுறு எண்ணக்கரு | செலவுகள் |
| வருமானம் | வரலாற்றுக் கிரயம் |
| இணைதல் எண்ணக்கரு | மூடும் பதிவுகள் |
| சீராக்கப் பதிவுகள் | முன்னெச்சரிக்கை எண்ணக்கரு |

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுப் பதங்களில் ஒன்றை விவரிக்கின்றன.

1. எப்போது வருமானத்தை அடையாளப்படுத்துவது என்பதை தீர்மானிப்பதில் தொடர்புகொண்ட கணக்கீட்டு எண்ணக்கரு
2. வருமான உழைப்பு செய்முறையில் பயன்படுத்தப்படும் பொருள்கள் சேவைகளினது கிரயம்
3. வருமானக் கூற்று உள்ளடக்கியுள்ள கால விசாலம்
4. வருமானத்திற்கு எதிராக செலவினங்களை ஈடுசெய்வதை தீர்மானிப்பதில் பயன்படுத்தப்படும் கணக்கீட்டு எண்ணக்கரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நீண்டகால சொத்துக்களின கிரயத்தை அதன் பயன்தரு ஆயுட்காலம் முழுவதற்கும் ஒழுங்கு முறையாகப் பகிர்வு செய்து இப்பகிர்வுத் தொகையை அவ்வவ் வருடத்திற்கு செலவாகக் காட்டுதல்

6. வருமான செலவின விடயங்களை வருமானக் கூற்றுக்கு இடமாற்ற பயன்படுத்துகின்ற பதிவுகள்

7. வருமான உழைப்பினாலும் செலவுகள் எழுவதினாலும் எழும் விளைவுகள் உரிமையாளரின் உரிமையை அதிகரிக்கும்.

8. வருமானத்தை உழைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட பொருள்கள் சேவைகளினால் செலவுகள் எழுகின்றன. இவ்வருமானம் உழைக்கப்படும்போதே அடையாளப்படுத்தப்படுகின்றது.

வேண்டப்படுவது:-

ஒவ்வொரு கூற்றுக்கும் உரிய மிகப் பொருத்தமான கணக்கீட்டுப் பதத்தை மேலே தரப்பட்டுள்ள கணக்கீட்டு பதங்களின் பட்டியலில் இருந்து குறிப்பிடுக. (விடையளிக்கும் போது உரிய கூற்றின் இலக்கத்தை குறிப்பிட்டு அதன் முன்னால் தெரிவு செய்யும் கணக்கீட்டு பதத்தினை எழுதினால் போதுமானதாகும்).

## வினா - 17 -

லக்சிறி கம்பனியானது ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 31 இல் தனது புத்தகங்களை மூடுகின்றன. இக்கம்பனியின் கணக்கீட்டு எழுதுவினைஞர் 2003 டிசம்பர் 31 இல் பின்வரும் சீராக்கங்களை மேற்கொள்ள வேண்டும் என கூறுகின்றார்.

1. 2003 ஆம் வருட முடிவில் ரூபா 2000 கிரயம் கொண்ட எழுதுகருவிகள் கையிலுள்ளது என கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இது தொடர்பாக எதுவித பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை எழுதுகருவிகள் கொள்வனவு செய்யப்பட்டபோது இத்தொகை எழுதுகருவி செலவுகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டும் காசில் செலவும் வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. 2003 டிசம்பர் மாதத்தில் இக்கம்பனி தனது சேவையை இன்னொரு நிறுவனத்திற்கு வழங்கும் பொருட்டு ஒரு உடன்படிக்கையை செய்து கொண்டது. இவ் உடன்படிக்கையின் கீழ் இக்கம்பனி எதிர்பார்க்கும் வருமானம் ரூபா 15000 ஆகும்.

3. 2003 ஜூலை 01 இல் வாடகைக்குப் பெறப்பட்ட கட்டடத்திற்காக செலுத்தப்பட்ட ஆரம்ப வைப்புப் பணம் ரூபா 100 000 இதன் மாதாந்த வாடகை ரூபா 1000 ஆகும். இத்தொகையில் ரூபா 5000 மாதாந்தம் வாடகை செலுத்தும் போது ஆரம்ப வைப்புப் பணத்திலிருந்து கழிக்கப்படுகின்றது. இவ்வருட காலத்தினுள் காசாகச் செலுத்தப்பட்ட வாடகைப் பணம் முழுவதும் வாடகைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளன.

4. இருப்பு பதிவேட்டின் படி 2003 டிசம்பர் 31 இல் முடிவடைந்த பொருள்களின் இருப்பு ரூபா 200 000 எவ்வாறாயினும் இப்பௌதீகப் பொருள்களை பார்வையிட்டதில் ரூபா 15000 கிரயம் கொண்ட பொருள்கள் முழுமையாகவே அழிந்துள்ளன என்பதை அறியக்கூடியதாக உள்ளது.

5. ஊழியர்களின் மொத்தச் சம்பளம் ரூபா 20 000 இதுவரை பதிவிடப்படவோ அல்லது செலுத்தப்படவோ இல்லை. இச்சம்பளத்தில் செலுத்தப்பட வேண்டிய ஊழியர் சேமலாப நிதித் தொகை ரூபா 5000. இத்தொகை ஊழியர் பங்களிப்பு ரூபா 2000 ஐயும் தொழில் தருநர் பங்களிப்பு ரூபா 3000 ஐயும் கொண்டுள்ளது.

6. விற்பனைகள் ரூபா 200 000 உம் விற்பனையில் பெறுமதி கூட்டல் வரி (VAT) ரூபா 30 000 உம் விற்பனைகள் கணக்கில் செலவில் வைக்கப்பட்டுள்ளது.

**வேண்டப்படுவது:-**

(1) ஒவ்வொரு சம்பவத்துக்கும் தேவைப்படும் இடங்களில் மாத்திரம் சீராக்கல் நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக.

(2) இச்சம்பவங்களுக்கு சீராக்கல் பதிவுகள் தேவைப்படாவிடின் இதற்கான காரணங்களைக் விளக்குக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா - 18 -

கங்கா அன்ட் கோ கம்பனியின் கணக்கீட்டு ஆண்டு 2001 இற்கான பேரேட்டுக்கணக்குகள் கனிஸ்ட கணக்கு எழுதுனர் ஒருவரால் தயாரிக்கப்பட்டவையாகும். 2001 டிசம்பர் 31 இல் அவர் தயாரித்த பரீட்சை மீதி இணங்கவில்லை. கணக்குகளின் பிற்பட்ட பரிசீலனை பின்வரும் வழுக்களை வெளிப்படுத்தின.

(i) கடன்பட்டோர் ஒருவரிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 2000 எனும் தொகைக்கான காசோலை ஒன்று காசு விற்பனைகள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(ii) சாதனங்களின் பழுதுபார்த்தலுக்கான கொடுப்பனவாக அமைந்த ரூபா 1800 எனும் தொகை சாதனங்கள் கணக்கின் வரவிற்கு இடப்பட்டிருந்தது.

(iii) மாதம் ஒன்றிற்கு ரூபா 2000 படி செலுத்தப்படவேண்டிய கட்டட வாடகை ஆண்டுக்காலத்தில் செலுத்தப்படவில்லை. எனினும் செலுத்தப்படவேண்டியிருந்த ஆண்டுக்குரிய மொத்த வாடகைப்பணம் கட்டடங்கள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு செலுத்தவேண்டிய வாடகைகள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(iv) அனுமதித்த கழிவிற்கான ரூபா 600 எனும் தொகை விற்பனைகள் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டு கடன்பட்டோர்க்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(v) கம்பனி ரூபா 25000 எனும் பெறுமானத்திற்கு அடுத்த ஆண்டிற்கான விற்பனை ஒப்பந்தம் ஒன்றிலிருந்து ரூபா 10000 ஆன முற்பணத் தொகையொன்றைப் பெற்றுக்கொண்டது. இக்கொடுக்கல் வாங்கல் பதியப்பட்ட போது ரூபா 25000 விற்பனைகள் கணக்கிற்குச் செலவு வைக்கப்பட்டதுடன் ரூபா 10000, ரூபா 15000 எனும் தொகைகள் காசேட்டிற்கும் கடன்பட்டோர் கணக்கிற்கும் வரவு வைக்கப்பட்டன.

வேண்டப்படுவது:-

(I) இவ்வழுக்களைத்திருத்துவதற்குத்தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) மேலே குறிப்பிடப்பட்ட வழுக்கள் ஒவ்வொன்றையும் திருத்தியமையின் இறுதி விளைவாகக்கிடைத்த பெறுமானம் கணக்கீட்டுச் சமன்பாட்டின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் விதத்தை காட்டுகின்ற கீழே தரப்பட்டுள்ள மாதிரியில் அமையும் ஓர் அட்டவணை பெறுமானத்திற்கு எதிரே அதிகரிப்புக்கு (+) எனும் அடையாளத்தையும் குறைவுக்கு (-) எனும் அடையாளத்தையும் இட்டுக்காட்டுக.

| சொத்து (ரூபா) | = | பொறுப்பு(ரூபா) + | உரிமையாளர் உரிமை(ரூபா) |
|---|---|---|---|
| (i) | | | |
| (ii) | | | |
| (iii) | | | |
| (iv) | | | |
| (v) | | | |

## வினா - 19 -

கணக்கீட்டு எண்ணக்கருக்கள் பற்றிய உமது அறிவின் அடிப்படையில் பின்வரும் அட்டவணையில் உள்ள வெற்றிடங்களுக்கு பொருத்தமான விடைகளைத் தருக. இவ்வினாவுக்கு விடையளிப்பதில் இங்கு தரப்பட்டுள்ளவாறு அட்டவணை ஒன்றைத் தயாரித்தல் சட்டாயமானதன்று

| எண்ணக்கரு | அடிப்படையான கருத்து | இவ்வெண்ணக்கருவினால் நிதிக்கூற்றுக்கள் மீது தோன்றும் ஒரு விளைவு |
|---|---|---|
| (i) கணக்கீட்டு அலகுசார் எண்ணக்கரு | | |
| (ii) இணைதல் எண்ணக்கரு | | |
| (iii) கால அளவு எண்ணக்கரு | | |
| (iv) செயற்படு அமைப்பு எண்ணக்கரு | | |
| (V) பண அளவீட்டு எண்ணக்கரு | | |
| (vi) வரலாற்றுக்கிரய எண்ணக்கரு | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா - 20 -

2001 டிசம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கு சுனிமாலின் கணக்கேடுகளில் செய்யப்படவேண்டிய செம்மையாக்கங்கள் சில பின்வருமாறு.

(i) 2001 டிசம்பர் 31 இருந்த படி களஞ்சியத்திலான இருப்பு ரூபா 250000 ஆகப் பெறுமானமிடப்பட்டது. அத்திகதியில் இருந்தபடி கொள்வனவுகளுள் களஞ்சியத்திற் பெற்றுக்கொள்ளப்படாதுஇடைப் போக்கில் இருந்த பண்டங்களின் பெறுமானம் ரூபா 12500.ஆகும்.

(ii) சுனிமாலின் தனிப்பட்ட வரியான ரூபா 8000 வணிகத்தினால் செலுத்தப்பட்டு நாணாவித செலவுகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டது. சுனிமால் தனது வீட்டைக்கட்டுவதற்கு மக்கள் வங்கியிடமிருந்து கடனாகப்பெற்றுக்கொண்ட ரூபா 25000 எனும் தொகைக்கான ஒரு காசோலை வணிகத்தின் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டு நாணாவித வருமானக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டது.

(iii) கடன்பட்டோர் ஒருவரான நிமலின் கணக்கிலிருந்த ரூபா 5000 ஆகிய ஒரு மீதி முற்பட்ட ஆண்டில் அறவிடமுடியாக் கடனாகப் பதிவளிக்கப்பட்டிருந்த போதும் அவர் தனது கடனின் தீர்ப்பனவாக அலுவலக சாதனம் ஒன்றைக் கொண்டு வந்தார் இச்சாதனம் ரூபா 6000 ஆகப் பெறுமானமிடப்பட்டது அவர் தனது கடன்களைத் தீர்ப்பதில் கால தாமதம் ஏற்பட்டதால் வணிகம் இம்முழுப் பெறுமானத்தையும் அவரது கடனுக்குப்பதிலாக கணக்கினுள் எடுத்துக்கொண்டது.

(iv) 2000 டிசம்பர் 31 இல் இருந்தபடி ரூபா 5000 ஆக அமைந்த அட்டுற்ற நாணாவிதச் செலவுகள் கடன்கொடுத்தோர் கணக்கிற் பதியப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது இத்தொகை 2001 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டு நாணாவிதச் செலவுகள் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டது 2001 டிசம்பர் 31 இல் இருந்தபடி அட்டுற்ற நாணாவிதச் செலவுகளும் முன்னதாகப் பணம் செலுத்தப்பட்ட நாணாவிதச் செலவுகளும் முறையே ரூபா 100 ரூபா 2500 என்பவையாகும்.

**வேண்டப்படுவது:-**

மேற்போந்த செம்மையாக்கங்களைப்பதிவதற்கா குறிப்பேட்டுப் பதிவுகள்

இச்செம்மையாக்கங்கள் செய்யப்படமுன் நிறுவனத்தினால் கணிக்கப்பட்ட தேறிய இலாபம் ரூபா 180000 ஆகும் எனக்கருதி இச்செம்மையாக்கங்கள் உட்சேர்க்கப்பட்ட பின்னர் உள்ள சரியான தேறிய இலாபத்தைக் காட்டும் ஒரு கூற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினா - 21 -

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றுக்களும் ரவி நிறுவனத்தின் கணக்கியல் உதவியாளரின் அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றது.

(i). வியாபார உரிமையாளரான ரவி தனது சொந்த பாவனைக்காக ரூபா 50000 க்கு கணனி ஒன்றை வாங்கினார். இப்பணம் வியாபாரத்தின் வங்கிக்கணக்கைப் பயன்படுத்திச் செலுத்தப்பட்டதால் இது அலுவலக உபகரணக்கணக்கில் பதிவிடல் வேண்டும் என அபிப்பிராயப்பட்டனர்.

(ii). சரக்கிருப்பில் உள்ளடங்கியுள்ள ரூபா 100000 பெறுமதியான பொருட்கள் வழக்கிழந்து போனது இதன் தேறிய தேறக்கூடிய பெறுமதி ரூபா 25000 கணக்கியல் உதவியாளரின் கருத்துப்படி இப்பொருட்கள் விற்பனை செய்யப்படும் வரைக்கும் எதுவித நட்டத்தையும் இனங்காண முடியாது என்பதாகும்.

(iii) கம்பனியினால் ஐந்து வருடங்களுக்கு முன்பு ரூபா 500 000 க்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு நிலத்துண்டை இப்பொழுது இதனை 750 000 க்கு விற்பனை செய்ய முடியும். இது தொடர்பாக கணக்கியல் உதவியாளரின் அபிப்பிராயம் என்னவென்றால் இப்பெறுமதியில் ஏற்பட்ட அதிகரிப்பை கட்டாயமாக இலாபமாக இனங்காண வேண்டுமென்பதாகும்.

வேண்டப்படுவது:-

கணக்கியல் உதவியாளரின் அபிப்பிராயம் அமுல்படுத்தப்படுமானால் இதனால் மீறப்படுகின்ற கணக்கியல் தத்துவத்தை (accontiug Principale) அல்லது எண்ணக்கருவினைக் குறிப்பிடுக.

மேற்கூறப்பட்ட ஒவ்வொரு கூற்றிற்குமான சரியான கணக்கீட்டுப் பரிகாரத்தைக் குறிப்பிடுக.

## வினா - 22 -

பின்வருவன கணக்கீட்டுத் தகவலின் சில பண்புக் குணாதிசயங்கள் ஆகும். பொருத்தமான தன்மை, நம்பகத் தன்மை, ஒப்பிடக்கூடிய தன்மை, மாறாத்தன்மை மேற்கூறப்பட்ட குணாதிசயங்களில் ஏதாவது இரண்டிற்குரிய அர்த்தத்தைக் குறிப்பிடுக.

வரலாற்றுக்கிரய கணக்கீட்டினூடாகபாதுகாக்கப்படுகின்ற மிக முக்கியமான பண்புக் குணாதிசயங்களைக் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பனியினால் கடைப்பிடிக்கப்பட்ட பின்வரும் செயற்பாடுகளினால் பெரும்பாலும் மீறப்பட்டுள்ள பண்புக் குணாதிசயத்தைக் குறிப்பிடுக.

(1) கடந்த இரண்டு வருட காலத்தினுள் இருப்பு மதிப்பீட்டு கொள்கை மூன்று தடவைகள் மாற்றப்பட்டுள்ளமை

(2) குறித்த ஒரு கைத்தொழிலில் உள்ள ஏனைய கம்பனிகளினால் கடைப்பிடிக்கப்படாத கணக்கீட்டுக் கொள்கையை ஒரு குறித்த கம்பனி மாத்திரம் பயன்படுத்துதல்.

(3) மூன்றாம் காலாண்டு முடிவிலும் கூட முதலாம் காலாண்டுக்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்காமை

## வினா - 23 -

2001 மார்ச் 31 இல் முடிவடைந்த வருடத்தில் லால் அண்ட் கம்பனியில் எழுந்த கிரயங்கள் பின்வருமாறு.

(1) புதிய வானின் உட்புறத்தை மாற்றியமைத்தமை இதன் கொண்டு செல் இயலளவை அதிகரித்தது.

(2). கீழே விழுந்து விட்ட களஞ்சியச்சாலைச் சுவரினை மீள் கட்டுதலால் எழுந்த கிரயம்

(3). புதிய கணிணி கொள்வனவினால் எழுந்த கடனிற்கான வட்டி

(4). புதிய ஒரு அலுவலக கட்டடத்தைக் கொள்வனவு செய்ததினால் எழுந்த சட்டக் கட்டணங்கள்.

(5). களஞ்சியசாலையைப் பெரிது படுத்துவதற்காக தேவையான செங்கற்களைக் கொண்டு வருவதற்காக எழுந்த உள்வந்த வண்டிற் கிரயம்

(6) அலுவலக கட்டடத்தை மீள் சாயமிடலுக்காக எழுந்த கிரயம்

வேண்டப்படுவது:-

மேற்கூறப்பட்ட ஒவ்வொரு செலவுகளும் மூலதனச் செலவா? அல்லது வருமானச் செலவா? என்பதைக்குறிப்பிடுக.

## வினா - 24 -

2000 ஆம் ஆண்டு டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதி வருட காலத்தினுள் கமல் நிறுவனத்தில் எழுந்த கணக்கு மீதிகளும் கொடுக்கல் வாங்கலும் பின்வருமாறு.

1. பொதுச்செலவுகள்:- வருடகாலத்தினுள் செலுத்தப்பட்டது ரூபா 5000
2000.01.01 இல் செலுத்தவேண்டியது ரூபா 1200
2000.12.31இல் செலுத்தவேண்டியது ரூபா 1800


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வாடகை வருடகாலத்தினுள் செலுத்தப்பட்டது ரூபா 3800
2000.01.01 இல் செலுத்தவேண்டியது ரூபா 500
2000.12.31 இல் செலுத்தவேண்டியது ரூபா 1200

3. கட்டணங்கள் வருடகாலத்தினுள் செலுத்தப்பட்டது ரூபா 7500
2000.01.01 இல் முற்பணமாக செலுத்தியது ரூபா 1400

4. எழுது கருவிகள் வருடகாலத்தினுள் கொள்வனவு ரூ 8000, 2000.01.01 இல் எழுது கருவிகள் இருப்பு ரூ 2500, 2000.12.31 இல் எழுதுகருவிகள் 3400.

5. தரகு வருமானம் வருடகாலத்தில் பெறப்பட வேண்டியது 1800. 1500 பெறப்பட்டது.

**வேண்டப்படுவது:**

இலாப நட்டக்கணக்கிற்கு மாற்றப்படுகின்றவையையும் மீதிகள் கீழ்கொண்டு வருவதையும் காட்டும் வகையில் 2000 ஆம் ஆண்டிற்கான பொருத்தமான பேரேட்டுக்கணக்குகள்.

## வினா - 25 -

ஒவ்வொரு வருடமும் செய்மல் கம்பனியின் நிதியாண்டு வருடம் டிசம்பர் 31 இல் முடிவடைவதாகும். 1999.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான பின்வரும் தகவல்கள் குறித்து சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்

(i) 2000.01.31 ஆம் திகதியில் முடிவடையும் மூன்று மாத அலுவலக கட்டட வாடகை ரூபா 6000 ஆகும். இத்தொகை 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் செலுத்தப்பட்டது.

(ii). நிறுவனம் 1999.02.01 இல் ரூபா 20 000 ஐ ஒரு வங்கியில் வருடத்திற்கு 12 % வட்டியில் முதலீடு செய்துள்ளது. வட்டி அரை வருடத்திற்கொரு முறை பெற்றுக்கொள்ளப்படுகின்றது. முதல் அரை வருடத்திற்கான வட்டி 1999.07.31 இல் ஏற்கனவே பெறப்பட்டு பதிவிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii). 1999 டிசம்பரில் உபகரணமொன்று களவாடப்பட்டுள்ளது. இத்திகதியில் இதன் புத்தகப் பெறுமதி ரூபா 15000 ஆகக் காணப்பட்டது. இது தொடர்பாக நட்டஈட்டுக்கம்பனி ரூபா 12000 ஐ செலுத்துவதற்கு ஒப்புக்கொண்டுள்ளது.

(iv). 1999.11.01 இல் இக்கம்பனி ஒரு 24 மாதத்திற்கான ஒரு நட்டஈட்டுப்பத்திரத்தை ரூபா 24 000 ற்கு கொள்வனவு செய்தது. இத் தொகை முற்செலுத்தப்பட்ட நட்டஈட்டுக்கணக்கின் வரவில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

(v). 1999.01.01 இல் எழுது கருவி இருப்புக்கணக்கு ரூபா 2500 வரவு மீதியைக் கொண்டிருந்தது இக்கணக்காண்டு காலத்தினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 15000 எழுது கருவிகள் இக்கணக்கில் பதிவிடப்பட்டிருந்தன 1999.12.31 இல் எழுது கருவிகள் இருப்புக்கணக்கின் மீது ரூபா 5500 ஆகும்.

**வேண்டப்படுவது:-**

மேற்கூறப்பட்டுள்ள சீராக்கங்களைப் பதிவிடுவதற்குத் தேவையான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக.

## வினா - 26 -

கதிர் பான்சி என்பவர்களது பங்குடமையின் 1999.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான கணக்குகளைத் தயாரிக்கையில் கணக்காளர் பல தெளிவற்ற நிலைமைகளை எதிர்நோக்கினார். கருக்கப்பட்ட இந் நிலைமைகள் பின்வருமாறு

(i). ஒவ்வொரு பங்காளருக்குமான சொந்த நட்டஈட்டுக்கட்டணம ரூபா 2500 ஐ பங்குடமை செலுத்தியது.

(ii). இந் நிறுவனம் நீண்ட காலம் தொடர்ந்தியங்குவதில் அதி உயர்ந்த நிச்சயமற்ற நிலைமையை கொண்டுள்ளது.

(iii). வாடிக்கையாளர் ஒருவருக்கு சில பொருட்கள் ஏற்கனவே விற்கப்பட்டிருந்த போதும் 2000 ஆம் ஆண்டு ஜனவரி மாத முடிவில் மட்டுமே இதற்கான பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

(iv). வாடிக்கையாளர்களில் ஒருவர் முறிவடையும் நிலையில் உள்ளார். என்ற தகவல் தெரியவந்துள்ளது. இவ் வியாபாரத்திடம் குறித்த வாடிக்கையாளர் ரூபா 50000 க்கு கடன்பட்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(v). வாடிக்கையாளரொருவரிடமிருந்து அதிகளவு இலாபத்தைத் தரக்கூடிய பெரியளவு கட்டளையை பெற்றிருந்த போதும் இவ் விற்பனை உண்மையில் இன்னும் இடம்பெற்றிருக்கவில்லை.

(vi). இப்பங்குடமை இவ்வருடத்தில் நட்டத்தைப் பெற்றிருந்தது எவ்வாறாயினும் இருப்பு மதிப்பீட்டில் தற்போது பயன்படுத்தியுள்ள FIFO முறைக்குப்பதிலாக LIFO முறையைப் பயன்படுத்தி இருப்பின் இலாபத்தைப் பெற்றிருக்க முடியும் என பங்காளர் நம்பினர்.

**வேண்டப்படுவது:-**

நிதிக்கூற்றுக்களைத், தயாரிக்கும் போது மேற்கூறப்பட்டுள்ள நிலைமைகளையும் பதிவிடுவதற்கு வழிகாட்டுகின்ற கணக்கீட்டு எண்ணக்கருவை அல்லது தத்துவத்தைக் குறிப்பிடுவதுடன் இவ் எண்ணக்கரு அல்லது தத்துவத்தின் அடிப்படையில் சரியான கணக்கீட்டு ஒழுங்கு முறையைத் தருக.

## வினா - 27 -

சேனகா நிறுவனத்தில் புதிதாக சேர்ந்த கணக்கு எழுது வினைஞர் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது எடுத்த தீர்மானங்களை பின்வரும் ஒவ்வொரு கூற்றுக்களும் பிரதி நிதித்துவப்படுத்துகின்றது மேற்படி ஒவ்வொரு தீர்மானங்களுடன் நீர் இணங்குகின்றீரா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறு இல்லையெனின் மீறப்பட்டுள்ள கணக்கீட்டு எண்ணக்கரு அல்லது தத்துவத்தினைக் குறிப்பிட்டு சரியான கணக்கீட்டு நடைமுறையைக் குறிப்பிடுக.

(i) இந்த ஆண்டில் நிலையான சொத்துக்களின் பெறுமதி அதிகரித்துள்ளமையால் நிலையான சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு பதியப்படவில்லை.

(ii). கம்பனி பல வருடங்களாக இருப்பு மதிப்பீட்டிற்கு எளிய சராசரி முறையொன்றைப் பாவித்து வருகின்றது. இலாபத்தை அதிகரித்துக் காட்டும் நோக்கில் இந்த முறையானது முதல் வந்தது முதல் சென்றது என்ற முறைக்கு மாற்றப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iii). மூன்று சிறிய கோவைகளின் (குடைநன) கிரயங்கள் அவைகளின் பயன்தரு காலம் நான்கு வருடங்களாக இருந்த போதும் அவைகள் கொள்வனவு செய்யப்படும் போது செலவுகளாக இடப்பட்டிருந்தன

(iv). நிறுவனத்தினால் செலுத்தப்பட்ட உரிமையாளரின் தனிப்பட்ட வைத்தியச் செலவு இலாப நட்டக்கணக்கில் பதியப்பட்டுள்ளது.

(v) நிலம் அதன் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையில் பதியப்பட்டுள்ளது. இவ்விலை அதன் கிரயத்தினை விட குறிப்பிடத்தக்களவு கூடியதாகவுள்ளது. இப்பெறுமதி அதிகரிப்பானது இலாப நட்டக்கணக்கில் உள்ளடக்கப்பட்டுள்ளது

(vi). வியாபாரத்திற்கெதிராக முக்கிய வழக்கொன்று போடப்பட்டுள்ளது. நிறுவன வழக்கறிஞர் இந்த வழக்கில் தோல்வியடைவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாக நம்புகின்றார். இதற்காக ஏற்பாடுகள் எதுவும் கணக்குகளில் செய்யப்படவில்லை.

## வினா - 28 -

பின்வருவன தனுஜா நிறுவனத்தின் 31. மார்ச் 1999 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பேரேடுகளில் காணப்பட்ட மீதிகளாகும்.

| | வரவு(ரூபா) | செலவு(ரூபா) |
|---|---|---|
| காரியாலய காகிதாதிகள் கொள்வனவு | 1200 | |
| செலுத்திய காப்புறுதி | 6000 | |
| செலுத்திய விளம்பரம் | 5500 | |
| செலுத்திய வாடகை | 4000 | |
| பெற்ற வாடகை | 1800 | |
| வங்கிக் கடன் | 95000 | |

பின்வரும் தகவல்கள் காணப்படுகின்றது.

(i) 31 மார்ச் 1999 இல் கையிருப்பாக இருந்த காரியாலய காகிதாதிகள் ரூபா 500 ஆகும்.

(ii) செலுத்திய காப்புறுதியானது 01 பெப்பிரவரி 1999 இல் செலுத்திய வருடாந்த கட்டணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(iii) தொழிற்சாலை மாதாந்த வாடகை ரூபா 400 ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(iv). செலுத்திய விளம்பரமானது 01 மார்ச் 1999 தொடக்கம் 31 யூலை 1999 வரைக்கான காலப்பகுதிக்கான விளம்பரத்திற்காகச் செலுத்திய கொடுப்பனவினை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

(v). நிறுவனத்தின் ஒரு பகுதியானது மாதம் ரூபா 150 படி வாடகைக்கு விடப்பட்டுள்ளது. வாடகைக்கிருப்போன் 01 மார்ச் 1999 இல் குத்தகை ஒப்பந்தத்தினை கைச்சாத்திடும் போது ஒரு வருடத்திற்கான வாடகையை முற்பணமாச் செலுத்தியிருந்தான்.

(vi). கம்பனி 01 மார்ச் 1999 இல் ரூபா 95000 வங்கிக்கடனைப்பெற்றது. மாதாந்த தவணைக்கட்டணமான ரூபா 3500 31 மார்ச் செலுத்தப்படடல் வேண்டும். ஆனால் இது 5 ஏப்பிரல் 1999 இல் செலுத்தப்பட்டிருந்தது. இந்த மாதாந்த தவணைக் கொடுப்பனவானது ரூபா 2500 வட்டியையும் ரூபா 1000 கடன் பகுதியையும் உள்ளடக்கியுள்ளது.

**பின்வருவனவற்றைச் செய்க.**

(i). 31 மார்ச் 1999 இல் மேற்படி சீராக்கங்களைப் பதிவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளைத் தருக.

(ii) இந் நிறுவனத்தின் 31 மார்ச் 1999 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேறிய இலாபமானது காசு அடிப்படையில் ரூபா 25000 ஆகக்கணிக்கப்பட்டுள்ளது. அட்டுறு அடிப்படையில் தேறிய இலாபத்தைக் கணிக்குக.

## வினா - 29 -

வரையறுத்த மனோஜ் கம்பனியின் 1997 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்கீட்டுப்புத்தகங்களில் இருந்து பின்வரும் தரவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| (i). ஆண்டுக்கான விற்பனைகள் | ரூபா |
| காசுக்கு விற்பனைகள் | 150 000 |
| கடனுக்கு விற்பனைகள் | 120 000 |
| (ii). 1997 ஆம் ஆண்டில் காசு சேகரிப்புக்கள் | |
| 1996 கடன் விற்பனைகளில் இருந்து | 30 000 |
| 1997 கடன் விற்பனைகளில் இருந்து | 80 000 |
| 1998 விற்பனைகளிலிருந்து முற்பணம் | 20 000 |
| (iii). 1997 ஆம் ஆண்டிற்கான செலவுகள் | |
| காசு செலவுகள் | 180 000 |
| அட்டுறுச் செலவுகள் | 70 000 |
| (iv). 1997 ஆம் ஆண்டில் காசு கொடுப்பனவுகள் | |
| 1996 அட்டுறு செலவுகள் | 10 000 |
| 1998 செலவுகள் (முற்பணமாக செலுத்தியது) | 7 000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பின்வருவனவற்றைச் செய்க

(1) 1997 ஆண்டிற்கான விற்பனை வருவாய், செலவுகள், தேறிய வருமானம் என்பவற்றைக் காசு அடிப்படையிலும் அட்டுறு அடிப்படையிலும் தனித்தனியாக கணிக்குக.

(2) மேற்படி அடிப்படையில் எது கணக்கீட்டு நியமத்துடன் (SLAS) ஒத்துப்போகின்றது எனக் குறிப்பிட்டு அதனைப் பின்பற்றுவதற்கான பிரதான காரணங்களை விளக்குக.

## வினா - 30 -

வரையறுத்த மனோகரன் கம்பனி ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 31 இல் தனது புத்தகங்களை மூடி சரி செய்கின்றது. 1997.12.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் தனித்தனியான விடயங்களுக்கு நாளேட்டுப்பதிவுகளைத் தருக.

(i) இவ்வாண்டுக்கான ரூ 250 000 கடன் விற்பனையில் 2% சேகரிக்கப்பட முடியாதவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

(ii) கம்பனி 1997 ஜனவரி 03 இல் இரண்டு வருடத்திற்கான தீக்காப்புறுதிப்பத்திரத்தினை ரூ 60 000 ற்கு கொள்வனவு செய்தது. இக் கொடுப்பனவு முற்பணக் காப்புறுதிக் கொடுப்பனவுக் கணக்கில் பதியப்பட்டுள்ளது.

(iv) கம்பனி 1997 ஜனவரி 01 இல் ஆக்கஉரிமை ஒன்றினை ரூ 150 000 கிரயத்தில் கொள்வனவு செய்தது. இது புத்தகங்களில் முறையாகப்பதியப்பட்டுள்ளது. இதன் மதிப்பிடப்பட்ட பாவனைக்காலம் 10 வருடங்களாகவும் எஞ்சிய பெறுமதி எதுவும் இல்லாததாகவும் இருக்கின்றது.

(v) கம்பனி 1997 யூலை 01 இல் இருந்து தொடங்குகிற இரண்டு வருட சேவை ஒப்பந்தம் ஒன்றிற்காக ரூபா 25 000 ஐ வாடிக்கையாளர் ஒருவரிடமிருந்து பெற்றுள்ளது. இத் தொகையானது சேவை வருமானமாகப் பதியப்பட்டுள்ளது.

(vi). கம்பனி 1997 ஏப்ரல் 01 இல் 10% ரூ 60 000 செல்மதி உண்டியலை ஒப்புக்கொண்டுள்ளது. இத்தினத்தில் இது புத்தகங்களில் முறையாகப்பதியப்பட்டுள்ளது. இந்த உண்டியல் 1998 மார்ச் 31 இல் ஒரு வருடத்திற்கான வட்டியுடன் செலுத்தப்படக்கூடியது.

(vii) 1997 ஜனவரி 30 இல் 1997 ஆம் ஆண்டிற்கான இறைவரி ரூ 12 000 ற்குரிய இறை அறிவித்தல் கிடைக்கப்பெற்றது. இத் தொகையானது முன்பு பதியப்படவோ செலுத்தப்படவோ இல்லை. இவ்வரி 1998 மார்ச் 31 ற்கு முன்னர் செலுத்தப்படக்கூடியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(viii) 997 டிசம்பர் 31 இல் கையிலுள்ள பௌதீகஇருப்பு ரூபா 30000 காணப்பட்டது. எனினும் கணக்கீட்டுப் பதிவுகள் ரூபா 55000 மீதியினைக் காட்டுகிறது. இவ்வித்தியாசத்திற்கு வழியிலுள்ள சரக்கு காரணமாகும்.

## வினா -31-

பின்வரும் ஒவ்வொரு கூற்றுக்களும் சில கணக்கீட்டுவழிகாட்டிகள், நடைமுறைகள் என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

1. கணக்கீட்டுப் பதிவேடுகளில் விலை மட்ட மாற்றங்கள் இனங்காணப்படுவதில்லை.
2. இருப்பினை மதிப்பிட கிரயத்துள் குறைந்தது அல்லது தேறிய தேறக் கூடிய பெறுமதி பாவிக்கப்படும்.
3. ஐந்தொகை தினத்திற்குப் பிந்திய எல்லா முக்கிய நிகழ்ச்சிகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
4. ஐயக்கடனிற்கான ஏற்பாடு ஏற்படுத்தப்பட்டுள்ளது.
5. திருத்தற் கருவிகளைக் கொள்வனவு செய்யும் போது செலவாகக் கருதப்படுகிறது.
6. குறிப்பிட்ட காலத்திற்குரிய வருமானங்களை உழைப்பதற்கு அக்காலத்திற்குரிய செலவுகள் பங்களிக்காதிருந்தால் மட்டும் இனங்காணப்படும்.

மேற்படி கூற்றுக்களை மிகவும் பொருத்தமான முறையில் விளங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு எடுகோள்கள் அல்லது தத்துவங்களைக் குறிப்பிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

C.B.A கல்வி நிலையம்
கதிரேசு வீதி, வவுனியா

சுடர் கல்வி நிலையம்
குட்செட் றோட், வவுனியா

| | | |
|---|---|---|
| கணக்கீடு | - | K.T. சீலன் |
| பொருளியல் | - | N.M. சுபாஸ் |
| வணிகக்கல்வி | - | T. வரதன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org